# கலிமதுத் தவ்ஹீத்

நாங்கள் தரம் மூன்றில் கலிமதுத் தம்ஜீதையும் அதன் பொருளையும் படித்தோம்.. இங்கு கலிமதுத் தவ்ஹீதையும் அதன் பொருளையும் படிப்போம். அல்லாஹ் ஒருவனே என்பதை கலிமதுத் தௌஹீத் வலியுறுத்துகிறது.

لَاإِلٰـهَ إِلاَّ اللّـٰـهُ وَحْدَهُ لَاشَرِيْكَ لَـهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
يُحْيِـي وَيُمِيْـتُ بِيَـدِهِ الْخَـيْرُ وَهُـوَ عَلٰى كُلِّ شَـيْءٍ قَـدِيْـرٌ

**இதன் பொருள்:-**

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு எவருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணை இல்லை. ஆட்சி அதிகாரம் அவனுக்கே உரியது. புகழ் அனைத்தும் அவனுக்கே உரியன. அவன் உயிர்ப்பிக்கின்றான்; மரணிக்கவும் செய்கின்றான். எல்லா நன்மைகளும் அவன் கையிலேயே இருக்கின்றன. எல்லாவற்றின் மீதும் சக்தியுள்ளவன் அவனே.

இக்கலிமாவில் ஏகத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. அல்லாஹ் வணக்கத்துக்குரியவன், தனித்தவன், இணை இல்லாதவன், அரசன், புகழுக்குரியவன், உயிர்ப்பிக்

கின்றவன், மரணிக்கச் செய்பவன், நன்மைகளை தன்வசம் வைத்திருப்பவன், சர்வ சக்தி உள்ளவன் என்பன யாவும் இதில் கூறப்படுகின்றன.

**அல்லாஹ்வை வணங்குவோம்.**
**அவனிடம் உதவி கேட்போம்.**

## பயிற்சி

## செயற்பாடுகள்

(1) மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கலிமதுத் தவ்ஹீதை மனனம் செய்ய வழிப்படுத்துங்கள்.

(2) ஒவ்வொருவராக வகுப்பில் முன்வந்து கலிமதுத் தவ்ஹீதையும் அதன் பொருளையும் கூற வழிப் படுத்துங்கள்.